Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CRMP NO.310/2026

**SWORN STATEMENT**

| Name | திரு.சாதிக்பாட்ஷா | Occupation | எழுத்தர் |
|---|---|---|---|
| Father's name | மைதீன் பாட்ஷா சாகிப் | Calling | |
| Village | மாதாங்கோவில் தெரு | Religion | |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of July 2026.

22.07.2026

## சத்தியபிரமாண வாக்குமூலம்

நான் திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் தாலுகா அலுவலகத்தில் எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். நான் முஸ்லீம் தக்னி ஜமாயத்தில் செயலாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்களது ஜமாத்தானது யூசுப்செரீப் தலைமையில் நல்லமுறையில் செயல்பட்டு வந்தது. எங்களது ஜமாத்தானது முறையாக பதிவு செய்யப்பட்டதாகும். அதன் பதிவெண் 140/2013 ஆகும். இந்நிலையில் எதிரிகளான சிக்கந்தர் பாட்ஷா சாகிப், ஷேக் அப்துல் ரகீம், முகமது அபுதாகிப், பசீர் அகமது, ஷேர்கான் ஆகியோர் மக்களிடத்தில் தாங்கள் தான் உண்மையான ஜமாத் என்று கூறி எங்களது பெயரை பயன்படுத்தி மக்களிடம் பணம் வசூலித்துள்ளார்கள். இது தொடர்பாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் நகர் காவல்நிலையத்திற்கு புகார்மனு அனுப்பியுள்ளோம். மேற்படி மனுவின்மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேற்படி நாங்கள் வாங்கிய ஜமாத்தின் பதிவெண்ணை நீங்கள் பயன்படுத்தக்கூடாது என்று எதிரிகளிடம் நாங்கள் நேரடியாக நானும் ஜமாத் தலைவர் யூசுப்செரீப், பொருளாளராக ஜாணிக் பாட்ஷா, இணைபொருளாளரான ஷேக் தக்ரியா மற்றும் எங்கள் ஜமாத்தின் உறுப்பினர்கள் சென்று கேட்டபோது எதிரிகள் உங்களால் முடிந்ததை செய்துகொள்ளுங்கள் என்று கூறி சுன்னி புளுத்தி என்று தகாத வார்த்தைகளால் திட்டி எங்களை ஆட்களை வைத்து அடிக்க வந்தார்கள். மேற்படி

எதிரிகள் எங்கள் பதிவெண்ணை பயன்படுத்தி பணம் பெறுவதை தடுக்கும்பொருட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.